திருவண்ணாமலை நகர திமுக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், எஸ். பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், நா.பழனி, நிர்மலாவேல்மாறன், சு.ராஜாங்கம், சி.சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை நகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்திலும் தீர்மானம்!

திருவண்ணாமலையை மாநகராட்சியாக தரம் உயர்த்திய முதலமைச்சருக்கு நன்றி!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, செப். 2 -

திருவண்ணாமலையை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்திட்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து, நகர திமுக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது. ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் கருத்துக்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

31.08.2024 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திருவண்ணாமலை நகர திமுக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு நகர அவைத் தலைவர் சி.சண்முகம் தலைமை வகித்தார். மாநகர மேயர் நிர்மலா வே ல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், நகர துணைச் செயலாளர்கள் மு. கருணாமூர்த்தி, வட்டி ஆ.அருணாச்சலம், ஜீவரேகாவிஜயராஜ், மாவட்ட பிரதிநிதிகள் குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு. எஸ்.பிரபு, என்.கே.ஏ.ஹக்கிம்சேட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர திமுக செய லாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

செயல்வீரர்கள் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்க ள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை நகராட்சியை, மாநகராட்சியாக தரம் உயர்த்திட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், நகர்ப்புற மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களுக்கும், பெற்றுத் தந்திட்ட பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும் இந்த நகர கழகம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

உலக தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவரும், ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராகவும் திகழ்ந்திட்ட தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, ஒன்றிய அரசு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி என்ற பெயருடனும், தமிழ் வெல்லும் என்ற வாசகத்துடனும் 100ரூபாய் நாணயத்தை வெளியிட்டது சிறப்பாகும். 100ரூபாய் நாணயத்தை வெளியிட்டதுடன் தலைவர் கலைஞர் அவர்களுக்கு பெரிதும் புகழாரம் சூட்டிய ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்நாத்சிங் அவர்களுக்கும், எழுச்சியான விழாவினை நடத்திட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசிற்கும் இந்த கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

எதிலும் வல்லவர் என முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டுப் பெற்று, எழுத்திலும் வல்லவர் என்பதை கலைஞர் எனும் தாய் நூலை இயற்றி, தந்தையாய், தாயாய், தலைவராய் திகழ்ந்த கலைஞருக்கு புகழ் மகுடம் சூட்டி நிருபித்த பொதுப்பணித்துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும், தனது திருக்கரங்களால் வெளியிட்ட கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், முதல் நூலினைப் பெற்று, கலைஞருக்கு புகழ் மாலை சூட்டிட்ட

சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் அவர்களுக்கும், முதல் நிகழ்வாக அனைவரையும் வரவேற்று, புத்தகத்தைப் பற்றி உயர்வாகப் பேசி பெருமை சேர்த்த கழக இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நகர திமுக நன்றியி னைத் தெரிவித்துக் கொள்கிறது.

புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல், திருத்தல் பணியினை தேர்தல் ஆணையம் தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்தப் பணி 20.08.2024 அன்று தொடங்கப்பட்டு, 18.10.2024 வரை, அதாவது அக்டோபர் மாதம் வரை நடைபெறவுள்ளது. எனவே கழகத் தோழர்கள் விரைந்து, புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் ஈடுபட இந்த கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

செப்டம்பர்15, கழகத்தின் முப்பெரும் விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்வது எனவும், கழகத்தின் பவள விழாவினை எழுச்சியாக கொண்டாடுவது எனவும் இந்த நகர கழகம் தீர்மானி க்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்தும், புதிய வாக்காளர்கள் சேர்த்தல் குறித்தும் கருத்துக்கள் வழங்கி, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர்

டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா ப.விஜயரங்கன், பொதுக்குழு உறுப்பினர் நா.பழனி மற்றும் திருவண்ணாமலை நகர வட்ட செயலாளர்கள், பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக நகர பொருளாளர் ந.சீனுவாசன் நன்றி கூறினார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தேவனூர் ஊராட்சியில் கட்டப்பட்ட நியாய விலை கட்டிடம்,சித்தேரி ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டிடத்தையும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் திறந்து வைத்தார். உடன் ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் உள்ளனர்.

கூகுள் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

சூழலை மேம்படுத்த தமிழ்நாடு அரசின் பல்வேறு முயற்சிகளை கோடிட்டுக் காட்டியதோடு, தமிழ் நாட்டில் திறன் வளர்ச்சி மிகுந்த இளைஞர்கள், பெண் கல்வி மற்றும் அவர்களின் திறன் வளர்ச்சி குறித்தும், தொழில்துறை, வீட்டுவசதி மற்றும் போக்குவரத்து தளவாட வசதிகள் போன்றவற்றில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருவது குறித்தும் எடுத்துரைத்தார். எதிர்காலத்தில் இதனை மேலும் வலுப்படுத்தி, ஆசியாவின் உற்பத்தி மையமாக தமிழ்நாட்டை உருவாக்க இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு மிகவும் உகந்த மாநிலமாக அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் விளங்கும் தமிழ்நாட்டில் ஆப்பிள் நிறுவனம் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

கூகுள் நிறுவனம்

கூகுள் நிறுவனம் செயற்கை நுண்ணறிவு, ஆன்லைன் விளம்பரம், தேடுபொறி தொழில்நுட்பம் (Search Engine Technology), கிளவுட் கம்ப்யூட்டிங், கணினி மென்பொருள், குவாண்டம் கம்ப்யூட்டிங், இகாமர்ஸ் மற்றும் நுகர்வோர் மின்னணுவியல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழில் நுட்ப நிறுவனமாகும். கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பாபெட் (Alphabet) அமெரிக்க பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கூகுள் நிறுவனத்தின் தலைமையகம் கலிபோர்னியாவின் மவுண்டன் வியூவில் அமைந்துள்ளது.

கூகுள் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, தமிழ்நாட்டில் AI ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூகுள் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை மவுண்டன் வியூ வளாகத்தில் சந்தித்த போது, தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பிக்சல் 8 போன்கள் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும், கூகுள் நிறுவனத்தின் பிற தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை தமிழ்நாட்டில் தொடங்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும், ஸ்டார்ட்அப்கள், தொழில்துறை சுற்றுச்சூழல் இயக்கம் மற்றும் எதிர்காலத்திற்கான திறன் ஆகியவற்றில் AI கண்டுபிடிப்புகள் மூலம் வளர்ச்சியை அதிகரிப்பது குறித்தும் பேசினார்.

இந்தியாவின் மிகப்பெரிய திறன் மேம்பாட்டு முயற்சியான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், கூகுளுடன் இணைந்து எதிர்காலத்தில் 2 மில்லியனுக்கும் அதிகமான இளைஞர்களை அதிநவீன AI திறன் வளர்ச்சியுடன் தயார் படுத்த தமிழ்நாடு தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், கூகுள் நிறுவனமும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனமும் இணைந்து தமிழ் நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்களை நிறுவுவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து அழைப்பு விடுத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் Linkedin முதன்மை செயல் அலுவலர் யான் ரோஸ்லான்ஸ்கி (Mr. Ryan Roslansky) மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, டேட்டா சென்டர் விரிவாக்கம், Global Capability Centre (GCC) மற்றும் AI திறன் முயற்சிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புகளில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து பேசினார்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும்

கடனுதவித் திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா தலைமையில் நடைபெற்றது!

தஞ்சாவூர், செப். 2 -

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (6T) கா.காஜா முகைதீன் தலைமையில் மேலாண்மை இயக்குநர் திரு.தி.என்.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் ஆகியோர் முன்னிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் 29.08.2024 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (எ) கா.காஜா முகைதீன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் குறித்தும் அதிகாரிகள் விளக்கினார்கள்.

இந்த ஆய்வில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளையும் விரைவாகவும் தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (எ) கா.காஜா முகைதீன் தெரிவித்தார்கள்.

முன்னதாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் தி.என்.வெங்கடேஷ், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சரபோஜி அரசு கல்லூரி மாணவர் விடுதி (பி.ந) க்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக தள ஆய்வு மேற்கொண்டு கட்டுமானத்திற்கான திட்ட மதிப்பீட்டினை ஆய்வு செய்தார்.

மேலும், அம்மாபேட்டையில் ரெஜினாஸ்லி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி மற்றும் உக்கடை அப்பாவிதேவர் உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நேரில் சென்று மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மிதிவண்டிகள் பொருத்தும் பணிகளை ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அறிவுரைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர். சுதா, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), க. அன்பழகன் (கும்பகோணம்), என்.அசோக் குமார் (பேராவூரணி), முனைவர். எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), மாநகராட்சி மேயர்கள் சண்.ராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.சுதா ராணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் கள்ளக்குறிச்சி சேலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ பல்வேறு கருத்துகளை முன்வைத்து நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன் வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ. மணிக்கண்ணன் எம்.எல்.ஏ கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

தி.மு.க. மாணவர் அணி

மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப். 2 -

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 6-9-2024 வெள்ளிக்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கத்தில்" எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதாசின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை மற்றும் தமிழினத் தொன்மைகளையும் பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு சுயமரியாதை சமூகநீதி சமத்துவம் ஆகிய கொள்கை களைக் பரப்புரைச் செய்திடவும், மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளை வழங்கிடவும் தி.மு.க. மாணவர் அணியின் சார்பில் கல்வி நிலையங்களில் அமைக்கப்பட உள்ள "தமிழ் மாணவர் மன்ற" சேர்க்கை விண்ணப்பப் படிவம் மற்றும் மன்ற அடையாள அட்டையினை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களிடம் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுபோது மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) கல்வி நிலையங்களில் "தமிழ் மாணவர் மன்றம்" அமைப்பு ஏற்படுத்துதல்;

2) ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்புக்கான மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடத்துவது - குறித்து.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

கோவை தெற்கு மாவட்டம் சாமளாபுரம் பேரூர் கழக பொதுக்குழு உறுப்பினர் கூட்டம் பேரூர் கழக செயலாளர் பி.வேலுச்சாமி தலைமையில் கூலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அன்பரசு, பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் துணை செயளாலர் தியாகராஜன், பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி, வார்டு கவுன்சிலர் வினோஜ் தயாளன், மாவட்ட தொழிலாளர் அணி துனை அமைப்பாளர் எழிரசன், மாவட்ட பிரதிநிதி தங்கராஜ், ரங்கசாமி, ஒன்றிய பிரதிநிதி அய்யம்பாளையம் சண்முகம், இருதயசாமி, முத்த முன்னோடிகள் கரிகாளன், எஸ்.வி.எஸ்.ராமசாமி, சுப்பிரமணியம், இளைஞர் அணி அமைப்பாளர் கருணாநிதி பலர் கலந்து கொண்டனர்.